மாலை முரசு

பக்கங்கள் 19+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 07 செவ்வாய்க்கிழமை 25.11.2025 | அதிர்வு 118

## கொழும்பில் வான் மோதி 5 வயது சிறுவன் பரிதாப மரணம்!



கொழும்பு, மாளிகாவத் தையிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 5 வயதான சிறுவ 04▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# மூன்றரை மாதங்களுக்கு தள்ளிப் போனது தமிழரசு வழக்கு!

(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு எதிராக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு இன்று நீதிமன்றத்தில் பதில் நீதிபதி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டு அடுத்த வருடம் மார்ச் 13 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த வழக்கில் எதிராளிகளில் ஒருவரான தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா பதவியில் இருந்து விலகி, காலமானமையை அடுத்து அவரது இடத்துக்கு இடையீட்டு எதிராளியாகக் கட்சியின் புதிய தலைவர் 04▶



### தொல்பொருள் பெயர்ப்பலகைகளை அகற்றிய வழக்கு:

# வாழைச்சேனை தவிசாளர் உள்ளிட்ட ஐவரும் இன்று பிணையில் விடுவிப்பு

### ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் அதிரடி வாதம்

(ந.லோகதயாளன்)

தொல்பொருள் இடங்களுக்குரிய பெயர்ப்பலகைகளை அகற்றியமை தொடர்பான வழக்கில் வாழைச்சேனை தவிசாளர், பிரதி தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் உட்பட ஐந்து பேருக்கும் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் இடங்களுக்குரிய பெயர்ப்பலகைகளை அகற்றியமை தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் அடிப்படையில் வாழைச்சேனை பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த வாழைச்சேனை பிரதே சபையின் தவிசாளர் சுதாகரன், பிரதி தவிசாளர், இரண்டு உறுப்பினர்கள் உள்ளிட்ட 4 பேர் இன்று வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். 05▶




# சிங்கர் இலத்திரனியல் காட்சியறை தீயில் முழுமையாக எரிந்து நாசம்!

## வவுனியாவில் இன்று காலை பரபரப்பு

(கி.வசந்தன்)

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் அமைந்திருந்த சிங்கர் இலத்திரனியல் காட்சியறை இன்று காலை 9. 45 மணியளவில் தீப்பரவலுக்குள்ளாகி முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது.

காட்சியறையின் மேல் தளத்தில் ஏற்பட்ட மின்னொழுக்கால் ஏற்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் தீயே இந்தக் காட்சியறை முழுமையாக எரிந்தமைக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

தீப்பரவல் ஏற்பட்டு சில நிமிடங்களில் மாநகர சபை தீயணைப்புப் பிரிவு வருகை தந்து தீயை அணைப்பதற்கு முயற்சித்த போதிலும் அது கட்டுக்கடங்காமல் தீப்பரவல் ஏற்பட்டது.

இந்நிலையில் அங்கு குழுமிய பொது மக்களும் இணைந்து தீயை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சுமார் ஒன்றரை மணி நேரமாக முயற்சித்தனர்.

தீயைக் கட்டுப்படுத்துவதற்கு விமானப் படையினர், இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் உதவியும் பெறப்பட்டிருந்தது. எனினும், காட்சியறை முழுமையாக தீயில் எரிந்தமையால் பல இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள் நாசமாகியுள்ளன.இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.















# வடமராட்சியில் பிரான்ஸ் இளைஞர் படுகொலை: அம்பாறையில் இருவர் ஹெரோயினுடன் கைது!

(பூ.லின்ரன்)

பிரான்ஸ் நாட்டில் இருந்து நாடு திரும்பி யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த இளைஞர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட குற்றச்சாட்டில் அம்பாறை, அக்கரைப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி, கரவெட்டி, கரணவாய் பகுதியைச் சேர்ந்த இராஜகுலேந்திரன் பிரிந்தன் (வயது 29) என்ற இளைஞர் கடந்த செவ்வாய்க்கிழமை படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில்,



சந்தேகநபர்களை அம்பாறையில் வைத்து ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட நவீன ரக மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல ஆயத்தங்கள் செய்துள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இருவரையும் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார், விசாரணைகளின் பின்னர் அவர்களைப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# 5 நபர்களைக் கடித்த பூனை இறந்த நிலையில் மீட்பு!

(பாறுக் ஷிஹான்)

வீடொன்றில் வளர்க்கப்பட்ட பூனை ஒன்று அந்தப் பகுதியில் உள்ள 5 பேரை கடித்த நிலையில் இறந்த சம்பவம் ஒன்று கல்முனை பகுதியில் பதிவாகியுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட நகர மண்டப வீதியில் இந்தச் சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

குறித்த பூனை 5 பேரைக் கடித்த பின்னர் காணாமல் போயிருந்தது. நீண்ட தேடுதலின் பின்னர் இறந்த நிலையில் மீட்கப்பட்டது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

உடனடியாக சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வருகை தந்த அதிகாரிகள் குறித்த பூனையை மீட்டு பரிசோதனை மேற்



கொண்டுள்ளனர்.

பின்னர் மேலதிக பரிசோதனைக்காக அந்தப் பூனையின் தலை வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதேபோன்று அண்மையில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட புறநகர் பகுதியில் பல பேரை கட்டாக்காலி நாய் ஒன்று கடித்த சம்பவமும் பதிவாகியிருந்தது.

இதற்கமைய குறித்த நபர்களுக்கு கடித்த நாயின் மாதிரி அறிக்கை Rabies positive என மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தால் (MRI) அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பிரதேசத்தில், பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டல், மற்றும் வளர்ப்பு நாய்கள், கட்டாக்காலி நாய்களுக்கு ARV தடுப்பூசி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# மாவீரர் துயிலும் இல்லப் பணிகளை மேற்கொண்ட பணிக்குழுவினர் மீது இராணுவத்தினர் தாக்குதல்!

## மணலாறுப் பகுதியில் அராஜகம்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டம், மணலாறுப் பகுதியில் உள்ள துயிலும் இல்லம் ஒன்றில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த பணிக் குழுவினரை இராணுவத்தினர் துப்பாக்கியால் அடித்துத் தாக்கிய சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது .

மணலாறு பகுதியில் உள்ள உதயபீடம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகளைச் செய்ய பொதுமக்கள் இன்று காலை அங்கு சென்று துப்பரவுப் பணிகளை மேற்கொண்டனர். அப்போது அங்கு நின்ற இராணுவத்தினரும், அளம்பில் புலனாய்வுத் துறையினரும் மாவீரர் துயிலும் இல்லத்தைச் சுற்றிவளைத்து அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கியால் தாக்கி அவர்களை அடித்து விரட்டினர். பாதிக்கப்பட்டவர்கள் அங்கிருந்து தப்பி வந்தனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

“போரில் இறந்த உறவுகளை நினைவுகூரலாம் என ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால் இப்படிக் கூறிவிட்டு மறைமுகமாக உங்கள் புலனாய்வுத் துறையினரையும், இராணுவத்தினரையும் அனுப்பி எம்மைத் தாக்குவதா? அளம்பில் புலனாய்வுத் துறையினர் எம்மை மிரட்டி இடையூறு செய்கின்றார்கள். மணலாறு துயிலும் இல்லத்தில் இராணுவத்தினர் படுத்திருக்கின்றார்கள்.

ஜனாதிபதி சொல்வது ஒன்று, ஆனால் இங்கு இராணுவத்தினரும், புலனாய்வுத் துறையினரும் செய்வது ஒன்று. இப்படிச் செய்வதெனில் ஏன் இறந்தவர்களை நினைவுகூரலாம் எனக் கூறினீர்கள்? இதற்கு எமக்கு ஒரு தீர்வு வேண்டும்.” – என்றார்.

# நாவலப்பிட்டியில் இன்று காலை ரயிலில் மோதி ஒருவர் மரணம்!

கொழும்பில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த ரயிலில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவர் மோதி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று காலை 9 மணியளவில் நாவலப்பிட்டி சென்பிரிட்ஜ் வீதியில் அமைந்துள்ள ரயில் கடவையில் இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து சடலத்தை மீட்டு நாவலப்பிட்டி ரயில் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு ரயில் பதுளை நோக்கிப் பயணித்துள்ளது.

இந்த இறப்புச் சம்பவம் விபத்தா அல்லது உயிர்மாய்ப்பா என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நாவலப்பிட்டி பொலிஸார், சடலத்தைப்




பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

### மூன்றரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வி.கே.சிவஞானம் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார். முன்னைய எதிராளியான பழைய தலைவர் மாவை சேனாதிராஜா ஏற்கனவே இவ்வழக்கில் பதில் மனுத் தாக்கல் செய்திருக்கின்றமையால் அவரது இடத்துக்குப் புதிதாக வரும் இடையீட்டு எதிராளி பதில் மனுவைத் தாக்கல் செய்ய முடியாது, அதனை நிராகரிக்க வேண்டும் என்று எதிராளிகளான சிறீதரன் எம்.பி. மற்றும் குகதாசன் எம்.பி. ஆகியோர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி இன்று மனுச் செய்தார்.

அந்த விண்ணப்பத்தை நிரந்தர நீதிபதி முன்னிலையில் சமர்ப்பிக்கும் படி பதில் நீதிபதி பணித்தார்.

எதிராளிகளான சிறீதரன் மற்றும் குகதாசனின் சட்டத்தரணிகளின் கோரிக்கைக்கு அமைவாக வழக்கு மூன்றரை மாதங்களுக்கு மேலாக எதிர்வரும் மார்ச் 13ஆம் திகதி திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இன்றைய நீதிமன்ற நிகழ்வுகள் குறித்து பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இந்த வழக்கின் எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்,

“இந்த வழக்கில் இடையீட்டு எதிராளியான சி.வி.கே.சிவஞானம் சேர்க்கப்பட்ட போது இந்த இரண்டு எதிராளிகள் (சிறீதரனும் குகதாசனும்) அதனை ஆட்சேபிக்கவில்லை. பின்னர் அவர் வழக்கு தொடர்பான தமது பதில் மனுவைத் தாக்கல் செய்வதற்கு கால அவகாசம் கோரிய போதும் அதையும் ஆட்சேபிக்கவில்லை. அதன் பின்னர் அவர் பதில் மனுத் தாக்கல் செய்த சமயமும் அதை ஆட்சேபிக்கவில்லை. இப்போது பதில் மனுவை வாசித்து விட்டு வந்து, அது தங்களுக்கு இடைஞ்சலாக இருப்பதைப் புரிந்து கொண்டு அதற்கு எதிராக இப்போது ஆட்சேபம் தெரிவிக்கின்றார்கள்.” – என்று குறிப்பிட்டார்.

### 5 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் வான் மோதி உயிரிழந்துள்ளார்.

வீட்டின் முன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் வீதியை நோக்கி ஓடிய போது வான் ஒன்று மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் சிறுவனுக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் அவர் இரத்த வாந்தி எடுத்தமையால் வானின் சாரதி அவரை கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

விசேட சிகிச்சைப் பிரிவில் சிறுவன் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வானின் சாரதியைக் கைது செய்த மாளிகாவத்தை பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## வாழைச்சேனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 22ஆம் திகதி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுகளில் தொல்பொருள் திணைக்களத்தால் தொல்பொருள் இடங்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இடங்களுக்குப் பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டிருந்தன.

வாழைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளில் தங்களது அனுமதிகள் பெறப்படாமல் குறித்த பெயர்ப்பலகைகள் இடப்பட்டன என்று தெரிவித்து வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளரினால் அந்தப் பெயர்ப்பலகைகள் அகற்றப்பட்டன.

இது தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்தால் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையிலும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் வழங்கிய உத்தரவுக்கு அமைவாகவும் விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வந்தனர்.

இதன் கீழ் வாழைச்சேனை பிரதேசபைக்குள் இருந்த தொல்பொருள் இடங்களைக் குறிக்கும் பெயர்ப்பலகைகளை நேற்று வாழைச்சேனை பொலிஸார் கைப்பற்றியதுடன் அது தொடர்பில் ஒருவரைக் கைது செய்திருந்தனர்.

இது தொடர்பில் வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர், பிரதி தவிசாளர் மற்றும் இரண்டு உறுப்பினர்களைக் கைது செய்கின்றமைக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும் இன்று வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தில் நால்வரும் ஆஜராகியிருந்தனர்.

இன்று வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணியும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளருமான எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

பெயர்ப்பலகைகளைத் திருடியது, அரச உத்தியோகத்தர் ஒரு விடயத்தை அதாவது ஒரு பெயர்ப்பலகையை நட்டால் அது அப்புறப்படுத்துவது குற்றம் போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுகள் பொருத்தமற்ற குற்றச்சாட்டுகள் என்று நீதிமன்றத்தின் கவனத்துக்கு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கொண்டு வந்தார். அத்துடன் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் கீழ் பொதுவழிகள் சட்டம் தொடர்பில் சொல்லப்பட்டுள்ளது வீதிகள் தொடர்பான அதிகாரங்கள் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரதேச சபை தவிசாளர் அந்தச் சட்டத்தின் கீழ் அதிகாரமுடையவர். அந்த அதிகாரத்தின் கீழ் செய்யப்பட்ட விடயத்தை அகற்றினார் என்று எக்காலத்திலும் குற்றச்சாட்டை முன்வைக்க முடியாது. அவருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் அதனை அவர் செய்துள்ளார் என்பதையும் நீதிமன்றத்தின் கவனத்துக்கு



ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கொண்டு வந்தார்.

அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியைப் பெற்றே பெயர்ப்பலகை இடப்பட வேண்டும் என்பதை நீதிமன்றத்தின் கவனத்துக்கு ஜனாதிபதி சட்டத்தரணியால் கொண்டு வரப்பட்டபோது அதனைத் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் ஏற்றுக்கொண்டதுடன் எதிர்காலத்தில் முறையான அனுமதியைப் பெற்றுக் கொள்வதாகவும், எதிர்காலத்தில் முறையாக அனுமதி கோரும்போது அதனைச் சபையில் சமர்ப்பித்து சபையால் முறையான அனுமதியை வழங்க முடியும் என்றும் கூறியதன் அடிப்படையில் வழக்கு சுமுகமாக தீர்க்கலாம் என்ற காரணத்தாலும், பொலிஸார் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் பிணை வழங்கக்கூடிய காரணங்களைக் கொண்டிருப்பதனாலும் ஐந்து பேரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் பிரதேச சபையின் முறையான அனுமதி பெறப்பட்டு பெயர்ப்பலகையிடும் பணிகள் நடைபெற்று இது தொடர்பான பிரச்சினை முடிவுறுத்தப்படுமானால் எதிர்வரும் 15ஆம் திகதி இந்த வழக்கு முடிவுக்கு வரும் என ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்தார்.

இதன்போது வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர், பிரதி தவிசாளர், இரண்டு உறுப்பினர்கள் உட்பட ஐந்து பேரும் தலா ஐந்து இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுதியளித்தது.

இந்த வழக்கானது மீண்டும் டிசம்பர் 15ஆம்திகதிக்குஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# யாழில் ஹெரோயினுடன் இரு இளைஞர்கள் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரியாலைப் பகுதியில் இரண்டரைக் கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹெரோயின் போதைப்பொருளைப் பயன்படுத்துவோருக்குப் பகிர்ந்தளிக்கும் வகையில் செயற்பட்டு வந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது



செய்யப்பட்டுள்ளார்.

குருநகர் பொலிஸ் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் நல்லூர் அரசடிப் பகுதியில் 570 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட 24 வயதுடைய இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.




# சாய்ந்தமருது பகுதியில் வெள்ள அபாயத்தையடுத்து அவசர களவிஜய நடவடிக்கைகள் தீவிரப்படுத்தல்!

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பகுதியில் வெள்ள அபாயத்தை அடுத்து, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் சுகாதார குழுவினரால் வெள்ள அபாயத்துடன் தொடர்பான சிறப்புக் களவிஜயம் இன்று மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கன மழையின் காரணமாக தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் ஏற்படும் அபாயம் மிகுந்திருப்பதை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக நிறைமாத கர்ப்பிணிகள், வயோதிபர்கள், குழந்தைகள் மற்றும் நோயாளிகள் பாதுகாப்பான இடங்களுக்கு முன்னெச்சரிக்கையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

இந்த நிலையில், சாய்ந்தமருது பிரதேச செயலாளருடன் ஒருங்கிணைந்த கலந்துரையாடலின் பின்னர், மக்கள் பாதுகாப்பாகத் தங்கக்கூடிய வகையில் அல்–ஹிலால் பாடசாலை தற்காலிக பாதுகாப்பு முகாமாக தெரிவு செய்யப்பட்டது. தேவையான தங்குமிடம், சுகாதார வசதி, குடி தண்ணீர் சுத்தம், பாதுகாப்பு ஆகியன உறுதிப்படுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் குறித்து விரிவான மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டது.

பாதுகாப்பு முகாமில் பொதுமக்கள் தங்கியிருக்கும் காலப்பகுதியில் எந்த வித சுகாதார பிரச்சினைகளும் ஏற்படாத வகையில் அடிப்படை மருத்துவ சேவைகள், அவசர சிகிச்சை வசதிகள், மருந்துகள், நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்டவை சுகாதார வைத்திய அதிகாரி அவர்களால் முன்கூட்டியே ஒருங்கிணைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கள விஜயத்தின் போது, வெள்ள அபாயம் ஏற்பட்டால் மக்கள் தாமதமின்றி பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்து செல்வதன் அவசியம் குறித்து சுகாதார வைத்திய அதிகாரி அவர்கள் வலியுறுத்தினார். மேலும், ஒவ்வொரு வீட்டிலும் முக்கிய ஆவணங்கள், குழந்தைகளின் தேவைகள், அவசர மருந்துகள், குடிதண்ணீர், உலர்ந்த உணவு போன்றவற்றை முன்கூட்டியே தயார் நிலையில் வைத்திருக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதுபோன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் சாய்ந்தமருது பகுதியில் வசிக்கும் அனைவருக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





# வளிமண்டலக் குழப்பம் காரணமாக வடக்குக்கு பாதிப்புகள் ஏற்படலாம் என்று எதிர்வுகூறல்!

## *அவசர முன்னாயத்தக் கலந்துரையாடல் ஆளுநர் தலைமையில்*

எதிர்வரும் நாள்களில் ஏற்படவுள்ள அரிதானதும், ஆபத்துமிக்கதுமான வளிமண்டலக் குழப்பம் காரணமாக வடக்கு மாகாணம் கடும் பாதிப்புக்களை எதிர்கொள்ளக் கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்த நிலையில், இடர் பாதிப்புக்களைத் தணிப்பது மற்றும் எதிர்கொள்வது தொடர்பான அவசர முன்னாயத்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலின் யாழ். பல்கலைக்கழகப் புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் நா.பிரதீபராஜா, தற்போதைய வானிலைச் சூழல் குறித்து விரிவான விளக்கமளித்தார்.

இரு காற்றுச் சுழற்சிகள் ஒன்றிணைந்து காற்றமுத்தத் தாழ்வு மண்டலமாக மாறி, இலங்கை ஊடாக நகர்ந்து செல்லும் நிகழ்வானது கடந்த 130 ஆண்டுகளில் இப்போதுதான் நிகழ்கின்றது. இது ஓர் அபூர்வமான மற்றும் ஆபத்தான வானிலை நிகழ்வாகும். இதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளில் மிகக் கனமழையும், பலத்த காற்றும் வீசக் கூடும்.

ஏற்கனவே பெய்த மழையால் மண் ஈரமாகியுள்ளதால், பலத்த காற்று வீசும்போது மரங்கள் வேரோடு சாய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. கடல் நீர்மட்டம் இந்தக் காலப்பகுதியில் உயர்வாக இருக்குமென்பதால் வெள்ள நீர் வடிந்தோட முடியாத சூழல் காணப்படும் என்று தெரிவித்தார்.இதனைத் தொடர்ந்து ஐந்து மாவட் டங்களதும் தற்போதைய நிலவரம் ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வார கால மழையால் 86 குடும்பங்களைச் சேர்ந்த 297 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்காக ஓர் இடைத்தங்கல் முகாம் அமைக்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் சில இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. மரங்களை அகற்றுவதற்கு மரக் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்பு போதாத நிலையில் உள்ளமை ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

கிளிநொச்சியில் இரணைமடுக் குளம் அதன் கொள்ளளவில் நான்கில் ஒரு பகுதியையே கொண்டுள்ளதால் வெள்ள அபாயம் இல்லை எனவும், நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

வவுனியா மற்றும் மன்னாரில் தற்போதைய நிலையில் மிகப் பெரிய இடர்கள் இல்லை. கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் இடையூறின்றி நடைபெற்று வருகின்றன. இடர் நிலைமை ஏற்பட்டால் பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதன்போது, பரீட்சை நிலையங்கள் இல்லாத பாடசாலைகளையும், பொது மண்டபங்களையும் இடம்பெயரும் மக்களுக்கான இடைத்தங்கல் முகாம்களாகப் பயன்படுத்துமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

வடக்கு மாகாணத்தின் பராமரிப்பிலுள்ள 54 குளங்களில் 52 குளங்களின் நீர்மட்டம் 25 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. 300 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்தால் மட்டுமே வான்பாயும் நிலை ஏற்படும் என்று மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவித்தார். இதேநேரம் கடல் நீர்மட்டம் இன்னமும் உயர்வடையாமையர், யாழ். மாவட்டத்தின் 3 தடுப்பணைகளும் திறக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் தீவகப் பகுதிகளில் நோயாளர்களைக் கொண்டு செல்வதில் ஏற்பட்ட சவால்களைச் சுட்டிக்காட்டிய மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர், கடற்படை மற்றும் விமானப் படையின் உதவியுடன் அவசர மருத்துவச் சேவைகளை உறுதிப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கடல் நீர்மட்டம் உயர்வதற்கு முன்னதாகவே, உள்ளூராட்சி மன்றங்கள் வாய்க்கால்களைத் துப்புரவு செய்து, தேங்கியுள்ள வெள்ள நீரை விரைவாக வெளியேற்ற வேண்டும். அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான நிதியை விடுவிக்குமாறு பிரதிப் பிரதம செயலாளருக்கு (நிதி) ஆளுநர் பணித்தார்.

மீட்புப் பணிகளுக்காக முப்படையினர் தயார் நிலையில் உள்ளனர் என்று தெரிவித்தனர்.

இடர் காலத்தில் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்கள் 24 மணி நேரமும் மக்களுக்கு உதவும் வகையில் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் (திட்டமிடல், நிதி), முப்படைப் பிரதிநிதிகள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீடிக்கும் இயலாமை

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பான உண்மைகளை அம்பலப்படுத்தி, சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்ற தமது உறுதிமொழியை நிறைவேற்ற முடியாமல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவும் அவரது அரசும் தடுமாறிக் கொண்டிருப்பது தெளிவானது.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த விடயத்தை விரைந்து அம்பலப்படுத்துவோம் என்று கொக்கரித்துக் கொண்டிருந்தார்கள் அநுரகுமார திஸாநாயக்கா உட்பட்ட ஜே.வி.பியினர்.

ஆட்சிக்கு வந்ததும் இதோ வெட்டிப் பிடுங்குகிறோம் என்ற மாதிரி பேசினார்கள். கடந்த ஏப்ரலில் குண்டுத் தாக்குதல் இடம்பெற்று ஆறு ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலையில், சூத்திரதாரிகளைக் கைது செய்து காத்திரமான நடவடிக்கை எடுக்காமல் விட்டால் நீண்ட நடை பயணப் போராட்டம் நடத்தி எதிர்ப்பைக் காட்டப் போகின்றோம் எனக் கிறிஸ்தவர்களின் மதத் தலைவரான கர்தினால் மல்கம் ரஞ்சித் எச்சரித்தார்.

அவசரப்படாதீர்கள், இதோ ஆறாம் ஆண்டுப் பூர்த்திக்கு முன்னர் நடவடிக்கை எடுக்கப் போகின்றோம் என்று ஜனாதிபதி உட்பட அரசு தரப்பினர் சமாளிப்பு அறிவிப்பு விடுத்தனர்.

வேறு ஒரு குற்றச்சாட்டில் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பிள்ளையானைக் கைது செய்து, ஏதோ உயிர்த்த ஞயிறு தினக் குண்டுத் தாக்குதல் விசாரணையில் முக்கிய விடயத்தை சாதித்து முன்னேற்றம் கண்டாகி விட்டது, திருப்புமுனை ஏற்பட்டு விட்டது என்பது போல் அரசு தரப்பினர் நாடகமாடினார்கள். ஆனால் உண்மையில் எதுவும் நடக்கவில்லை.

"இப்போது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான முக்கிய விசாரணை அறிக்கைகளில் பக்கங்கள் கிழித்தெடுக்கப்பட்டு விட்டன, அதனால் புதிய ஆதாரங்களை அரசு சேகரிக்கத் தொடங்கியுள்ளது, ஆதாரங்கள் அழிக்கப்பட்டு இருந்தாலும் அதன் பின்னணியில் உள்ள உண்மைகளை வெளிப்படுத்துவதில் இருந்து அரசு பின்வாங்காது, ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு விசாரணை நடத்துவது கடினம், இருப்பினும் எங்கள் விசாரணை குழு மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது." - என்றெல்லாம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா இப்போது கயிறு விடுகின்றார்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொணரக் குற்றப் புலனாய்வுத் துறையின் தலைவர் ஷானி அபேசேகர மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன ஆகியோர் இரவும் பகலும் உழைத்து வருகின்றனர் என்றும் ஜனாதிபதி புகழாரம் சூட்டுகின்றார்.

விசாரணை தொடர்பில் வாய்ச்சவடால் பேச்சுக்களைக் கடந்த ஆறு ஆண்டுகளாகக் கேட்டு மக்கள் களைத்துப் போய்விட்டார்கள். விடயம் முன்ன நகர்வதாகத் தெரியவில்லை.

'பிள்ளையார் கல்யாணம் போல' இலங்கையில் நாளை, நாளை என்று பேசப்படும் விவகாரங்களில் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளை அம்பலப்படுத்தி சட்டத்தின் முன்நிறுத்தும் விவகாரமும் ஒன்றாகி விட்டது.

இடையில் அரச அதிகாரம் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய தரப்புகள் என்று சந்தேகிக்கப்படும் குழுக்களுக்குச் சென்றமையால் நிறைய ஆதாரங்கள் மறைக்கப்பட்டன, பல பதிவுகள் அழிக்கப்பட்டன என்று ஜனாதிபதி கூறுகின்றார்.

எது, எப்படி என்றாலும் இயலாமை நிலைமையைச் சமாளிப்பதற்கான சாட்டுக் கூறல் மாத்திரம் நேரத்துடன் தயாராகிவிட்டது என்பது நிச்சயம்.



## தேசிய மக்கள் சக்தியின் பலத்த எதிர்ப்பையும் மீறி

# திருமலை புத்தர் சிலைக்கு எதிரான தீர்மானம் வலி. கிழக்கு பிரதேச சபையில் நிறைவேற்றம்!

(எஸ். நிதர்ஷன்)

திருகோணமலை புத்தர் சிலை மற்றும் தமிழர் தாயகத்தின் இனவிகிதாசாரத்தையும் வரலாற்றுத் தொன்மையையும் மாற்றியமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பௌத்த சிங்கள பேரினவாத ஆக்கிரமிப்புக்களை அரசு உடன் நிறுத்தவேண்டும் என்ற தீர்மானம் தேசிய மக்கள் சக்தியின் கடும் எதிர்ப்பையும் மீறி வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் வியாழக்கிழமை மாதாந்த அமர்வு நடைபெற்றது.

இந்த அமர்வில் தமிழ் மக்களின் வரலாற்றுத் தாயகத்தில் அவர்களது இனவிகிதாசாரத்தையும் வரலாற்றுத் தொன்மையையும் அடையாளங்களையும் மாற்றியமைக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் அரசு உடனடியாக நிறுத்தவேண்டும். அரசு தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதாகத் தெரிவிக்கின்றபோதும் அது சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்குக் கட்டுப்பட்டதாகவும் ஒத்தோடுவதாகவுமே உள்ளது. அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என தவிசாளரினால் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் அவசர தீர்மானம் மேற்கொள்ள வேண்டும் என்று உறுப்பினர் இ.கஜிபனினால் தவிசாளரிடம் கோரிக்கை ஒன்றும் சபையில் முன்வைக்கப்பட்டது.

சபையின் இத் தீர்மானத்துக்குத் தாம் ஒருபோதும் ஆதரவு அளிக்க முடியாது என தேசியமக்கள் சக்தி உறுப்பினர்கள் கூட்டாக தவிசாளருடன் வாதிட்டனர்.

பின்னர் இத் தீர்மானத்தில் அரச பௌத்த சிங்கள பேரினவாதத்தை முன்னெடுக்கின்றது என்ற கருத்தினை நீக்கவேண்டும் எனவும் தேசிய மக்கள் சக்தியினர் கடுமையான வாதத்தில் ஈடுபட்டனர்.



பிரதேச சபையில் புத்தர் சிலை பற்றிய தீர்மானத்தை முன்வைக்கமுடியாது. இந்தச் சபை அபிவிருத்திக்கான அலகு. ஆகவே வலிகாமம் கிழக்குக்கு உட்பட்ட அபிவிருத்தி விடயங்களை மட்டுமே பார்க்கவேண்டிய சபை எதற்காக இங்கே புத்தர் சிலை தொடர்பான விவகாரங்களை முன்வைக்கின்றீர்கள் எனவும் கடுமையாக தேசிய மக்கள் சக்தியினர் வாதிட்டனர்.

இந்த நிலையில் பிரதேச சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய மக்கள் சக்தி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் ஒருமித்து, அரசு தமிழ் மக்களை ஏமாற்றக் கூடாது என்று தெரிவித்ததுடன் தேசிய மக்கள் சக்தி அரசு பௌத்த விகாரை விடயத்தில் நடந்து கொண்ட விடயத்தையும் எதிர்த்தனர்.

வரலாற்று ரீதியில் மாறிமாறி வரும் அரசுகளின் இனவாத நீட்சியே நடக்கின்றது என்று சகல தமிழ்க் கட்சி உறுப்பினர்களும் வாதிட்டனர். இந்த நிலையில் சபையில் அமளிதுமளி நீடித்தது.

சபையை அமைதிப்படுத்திய தவிசாளர், பொலிஸார் மீளவும் பேரினவாத நோக்கில் அமைக்கப்பட்ட பௌத்த சிலையை அகற்றிவிட்டு மீண்டும் பக்கவமாக அரசு நிறுவியது. இராணுவம் பாதுகாப்பளித்தது. பாதுகாப்பு அமைச்சர் நாட்டின் மீயுயர் சபையில் தம்மால் மீள சிலை அகற்றப்படவில்லை எனவும் பாதுகாப்பிற்காகவே சிலை நகர்த்தப்பட்டதாகவும் மீள நிறுவப்படும் என அறிவித்தார். இவைகள் அரசின் நடத்தைகள் கிடையாதா? கொள்கை கிடையாதா? தமிழ் மக்களை ஒடுக்கிவிட்டு சகித்து வாழக் கோருவதில் என்ன நியாயம் எனக்கேள்வி எழுப்பியதுடன் தேசிய மக்கள் சக்தி எதிர்த்தால் வாக்கெடுப்பின் ஊடாக தீர்மானம் பரிசீலிக்கப்படும்.- என்றார்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டி முன்வைக்கப்படும் பிரேரணையை ஏற்றுக்கொள்ள முடியாது எனக்கூறி தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் சபையில் இருந்து அரசை நியாயப்படுத்தி தீர்மானத்துக்கு எதிராகத் தமது பலத்த எதிர்ப்பை வெளிப்படுத்தியவாறு வெளிநடப்புச் செய்தனர். சபை ஆசனங்களில் இருந்து எழுந்து சென்று தமது எதிர்ப்பைக் காட்டினர்.

இந்த நிலையில் இந்தப் பிரேரணையில் எவருக்காவது ஆட்சேபனைகள் உள்ளவா எனத் தவிசாளர் கேள்வி எழுப்பினார். பிரசன்னமாகியிருந்த உறுப்பினர்கள் நடைபெற்றது தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத ஆக்கிரமிப்பு என பிரேரணையின் மீது கருத்துரைத்தனர்.

இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் பிரேரணையை வலுப்படுத்தும் கவனவீர்ப்புக் கருத்துக்களுடன் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறியது.




# ஊர்காவற்றுறை சபையின் ‘பட்ஜட்’ தோற்கடிக்கப்பட்டது!

(எஸ்.நிதர்ஷன்)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஆளுகையில் உள்ள ஊர்காவற்றுறை பிரதேச சபையின் வரவு – செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

13 ஆசனங்களை கொண்ட ஊர்காவற்றுறை பிரதேச சபையில் , ஈழ மக்கள் ஜனநாயக கட்சி 4 ஆசனங்களையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன தலா 03 ஆசனங்களையும், இலங்கை தமிழ் அரசுக் கட்சி 2 ஆசனங்களையும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளன.

தவிசாளர் அன்னலிங்கம் அன்னராசா நடைபெற்ற சபை அமர்வில் வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தபோது அது தோற்கடிக்கப்பட்டது.

வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் இருவரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஒருவருமாக மூவர் வாக்களித்தனர்.

வரவு – செலவு திட்டத்துக்கு எதிராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நால்வரும் தேசிய மக்கள் சக்தியின் மூவரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலா ஒருவர் என 10 பேர் வாக்களித்தனர்.

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற தவிசாளர் தெரிவின் போது திருவுளச் சீட்டு மூலம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் அன்னலிங்கம் அன்னராசா தவிசாளராகவும் உப தவிசாளராக இலங்கை தமிழரசுக் கட்சியின் செபஸ்தியான் பிள்ளை லெனின் ரஞ்சித்தும் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈ.பி.டி.பியும் என்.பி.பியும் இணைந்தே ‘பட்ஜட்’டைத் தோற்கடித்துள்ளன!

### ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் தேசிய மக்கள் சக்தியும் இணைந்து திட்டமிட்டு வரவு – செலவு திட்டத்தைத் தோற்கடித்தன என்று ஊர்காவற்துறை பிரதேச சபை தவிசாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

ஊர்காவற்துறை பிரதேச சபையின் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமை தொடர்பாக கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தபோது அதனை எதிர்த்து வாக்களித்தவர்களிடம் திருத்தங்களை முன்வைக்குமாறு கோரியபோதும் அதனை செய்யாமல் எதிர்த்து வாக்களித்தனர்.

சபை வருமானத்தை அதிகரிக்குமாறு கூறுகிறார்கள். ஆனால் வருமானத்தை அதிகரிப்பதற்கு தாங்கள் ஒத்துழைக்க மாட்டோம் என்கிறார்கள். எங்களைத் தேடச் சொன்னார்கள். வருமான மூலத்தை கண்டறிய நான் ஒரு குழுவை அமைக்க கோரியிருந்தேன். அதற்கும் அவர்கள் ஒத்துழைக்கவில்லை.

வருமானம் இல்லாத சபையில் வருமான வழிகளை கண்டறிய ஒத்துழைக்காமல் செயற்பட்டால் நாம் என்ன செய்வது? இத்தனை ஆண்டுகள் ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஆண்டு என்ன செய்தது?

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் தேசிய மக்கள் சக்தியும் இணைந்து திட்டமிட்டு வரவு – செலவுத் திட்டத்தைத் தோற்கடித்துள்ளன. வரவு – செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டமை தொடர்பாக நான் அலட்டிக் கொள்ளவில்லை. நாம் தொடர்ந்து முன்செல்வோம். – என்றார்.



# கிண்ணியா காக்காமுனை கரச்சை வீதியை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிண்ணியா பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட காக்காமுனையையும் கோழி முட்டை கரச்சை வீதியையும் இணைக்கும் வீதியானது மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுகிறது என்று அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த இந்த வீதி சுமார் 15 வருட காலமாக உடைந்து பள்ளமும் படுகுழியுமாகக் காணப்படுகிறது. மழை காலங்களில் நீர் தேங்கி நிற்பதால் இதன் மூலம் பயணிப்பதில் சிரமம் ஏற்படுகிறது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் இவ் வீதியை பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வியாபாரிகள், பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இது தொடர்பில் பல முறை உரிய அதிகாரிகளிடம் குறித்த வீதியை புனரமைக்க கோரி எழுத்து மூலமாக கடிதங்கள் வழங்கப்பட்ட போதிலும் இன்னும் புனரமைக்கப்படவில்லை. தற்போது மழை காலம் என்பதால் நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்துக்குத் தடையாகவும் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா பிரதேச சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாகவோ இந்த வீதியை செப்பனிட்டு தருமாறும் கோரிக்கையை முன்வைப்பதுடன் தற்போதைய அரசிடமும் கோரிக்கையாக முன்வைக்கிறோம் எனவும் தெரிவிக்கின்றனர். கடந்த காலங்களில் இந்த வீதியைக் குப்டை கூளங்களை வைத்து மூடி அபிவிருத்தி என்ற போர்வையில் நாசமாக்கினர் என்றும் உரிய வகையில் வீதியை விரைவாகப் புனரமைக்க நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத் துள்ளனர்.

# வெள்ள அபாயத்தை தடுக்க அடை மழையில் களத்தில் இறங்கிய அக்கரைப்பற்று முதல்வர்!

(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் பரவலாக பெய்துவரும் அடைமழை காரணமாக வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.இதனை கவனத்தில் கொண்டு அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் பிரதான வடிச்சல் வாய்க்கால்கள் அனைத்திலும் நீர் வழிந்தோட முடியாமல் தடைப்பட்டுள்ளன. இந்தத்தடைகளை அக்கரைப்பற்று மாநகர முதல்வர் ஏ.எல்.எம் அதாஉல்லாஹ் நேரடியாக கண்காணித்து நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

அதன் அடிப்படையில் அக்கரைப்பற்று பலாஹ் வட்டார எல்லைக்குள் இருக்கும் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் பின்னால் இருக்கும் நண்டுக்குழி வாய்க்காலும் மோட்டுவெளி வாய்க்காலும் இணையும் சந்தியில் ஏற்கனவே பதிக்கப்பட்டிருக்கும் குழாய்களுக்கு மேலதிகமாக புதிய வடிச்சல் குழாய்கள் பதிப்பதற்கான ஏற்பாடும் முதல்வர் ஏ.எல்.எம் அதாவுல்லாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



அடை மழை என்றும் பாராமல் மோட்டுவெளி வாய்க்கால், முஸ்லிம் மத்திய கல்லூரி மைதானத்தின் ஊடாக செல்லும் வாய்க்கால் அதே போன்று பலாஹ் வட்டாரத்தின் அனைத்து வாய்க்கால்களையும் மேயர் பார்வையிட்டார்.

அக்கறைப்பற்றில் அதிக மழை பெய்திருந்தாலும் முதல்வரின் விரைவான இந்தச் செயற்பாடுகளால் மிகவும் குறுகிய நேரத்துக்குள் நீர் வடிந்தோடியது.

அக்கரைப்பற்று மாநகர முதல்வருடன் நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ். சுகிதரன், மாநகர சபை உறுப்பினர்கள் இணைந்து செயல்பட்டனர்.

# இலங்கையின் மொழி உரிமைச் சட்டத்தை மீறி தமிழை மூன்றாவதாக்கிய தொல்லியல் திணைக்களம்!

(பழுவூரான்)

இலங்கையின் மொழி உரிமைச் சட்டத்தை மீறி தமிழ் மொழியை மூன்றாவது மொழியாக்கியதோடு மட்டுமல்லாமல் தமிழ் மக்களுக்கோ, தமிழ் மக்களின் பிரநிதிகளுக்கோ, உள்ளூராட்சி சபைகளுக்கோ அறிவிக்காது அவர்களது பிரதேசத்தில் தொல்லியல் திணைக்களம் பெயர் பலகைகளை இட்டு மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.




அத்தோடு இலங்கையின் மொழி உரிமைச் சட்டத்தை மீறி தமிழ் மொழியை மூன்றாம் மொழியாக பெயர் பலகைகளில் அடையாளப்படுத்தியுள்ளது.

இலங்கையின் மொழி உரிமைச் சட்டம், 1978 அரசியலமைப்பின் நான்காம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் மற்றும் 1987-1988 ஆம் ஆண்டு அரசியலமைப்புத் திருத்தங்களின் மூலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளும் இலங்கையின் அரச கரும மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கல்முனையில் வெள்ள அபாயம் முகத்துவாரங்கள் அனைத்தும் திறப்பு!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடை மழை காரணமாகக் கல்முனைப் பிராந்தியத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு இந்தப் பகுதியிலுள்ள அனைத்து முகத்துவாரங்களையும் திறந்து, வெள்ள நீரை கடலுக்கு அனுப்பும் நடவடிக்கைகளை கல்முனை மாநகர சபை துரிதமாக முன்னெடுத்துள்ளது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபியின் அறிவுறுத்தலின் பேரில் கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, பாண்டிருப்பு மற்றும் பெரிய நீலாவணை பிரதேசங்களின் கடல் வாய் முகத்துவாரங்கள் தோண்டித் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கல்முனையின நடராசா வாய்க்கால் உள்ளிட்ட முக்கிய வாய்க்கால்கள் மற்றும் மதகுகள் யாவும் துப்பரவு செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே துப்பரவு செய்யப்பட்டு, மீண்டும் குப்பைகளாலும் மண் திட்டுகளாலும் நிரம்பியுள்ள வடிகான்கள் துரிதமாக சீர்செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை கல்முனையையும் நாவிதன்வெளி, சவளக்கடை மற்றும் கொலனிப் பகுதிகளையும் இணைக்கும் கிட்டங்கி தாம்போதியில் வெள்ள நீர் பாய்வதன் காரணமாக பரவியிருந்த ஆற்று வாழைகள் அகற்றப்பட்டு, அப்பாதை சீர் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்ப்பாணத்துக்கு கற்க வந்தேன்... கற்றுக் கொண்டேன்!

யாழ்ப்பாணம் எனக்கு முதன்முதலாக ஒரு வரை படத்தின் பெயராக இருந்தாலும், இப்போது அது என் நினைவின் மொழி, என் மனத்தின் ஓசை, என் பயணத்தின் எலும்புக்கூடு போல ஆகிக் கிடக்கிறது. மூன்று ஆண்டுகளாக இந்நகரில் மாணவியாக வாழ்ந்த அனுபவம், எனக்கு வெறும் கல்விப் பயணமாக இல்லாமல், ஒரு சமூகத்தின் ஆழத்தையும், மனித உணர்வுகளின் கனமும், வாழ்க்கையின் மெல்லிய நிறங்களையும் கற்றுக் கொடுத்த ஓர் அனுபவ உலகமாக மாறிவிட்டது. நான் இந்த நகரத்துக்குக் கற்க வந்தேன். ஆனால் இன்று திரும்பிப் பார்க்கும் போது, நான் கற்றிருப்பது புத்தகங்களின் அறிவையே அல்ல. இந்த நகரின் ஆன்மாவையே.

யாழ்ப்பாணத்துக்கு முதன்முதலாக வந்தபோது, பஸ் நிலையத்தில் இறங்கிய அந்த ஒரு நொடியில் நான் பார்த்ததை இன்றும் மறக்க முடியவில்லை. அந்த நிலையத்தின் அமைதியில் ஒரு சொல்லப்படாத கதையுண்டு. டச்சு காலனித்துவம் தொடங்கி போர் காலம் வரை இந்நகரம் தாங்கிய மாற்றங்களின் ஒலி அங்கே ஒளிந்திருப்பது போல தோன்றியது.

பல்கலைக்கழக விடுதிக்குச் செல்லும் வழியில் தெரிந்தது இந்த நகரின் எளிமை பழைய மரக்கதவுகள், நிழல்கொடுக்கும் மாமரங்கள், சைக்கிளில் பயணம் செய்யும் மக்களின் அசைவில்லா சமாதானம் இவை அனைத்தும் அறிமுகமில்லாத எனக்குக் கூட பரிச்சயமான உணர்வைத் தந்தன. "பழகிப் போய்விடுவாய்" என்று சொல்லிய விடுதி வார்டனின் புன்னகை அன்றைய பயத்தை அரைபாதி குறைத்தது.

பல்கலைக்கழக வாழ்க்கை எனக்கு ஒரு புதிய விண்மீன் போல திறந்தது. இங்கு கற்றுக் கொடுக்கப்படும் பாடங்கள் புத்தகங்களையும் குறிப்புகளையும் தாண்டி, மனிதர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதையே எனக்குக் கற்றுத் தந்தன. யாழ்ப்பாணத்தின் கல்வி கலாச்சாரம் தனிக்கொரு மரபு. இங்கே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சொல்வது "நன்றாக படி" என்ற ஒரு சாதாரண அறிவுரை அல்ல. அது இரத்தத்தோடு கலந்த ஒரு வேண்டுகோள். பல போர் காலங்களையும் தாண்டி கல்வியைப் பாதுகாத்த மக்கள் இங்கு வாழ்கிறார்கள் என்பதை நான் இங்கு வந்த பின்னரே உணர்ந்தேன். மாணவர்கள் நூலகத்தில் விடியற்காலம் வரை அமர்ந்து படிப்பதும், பேராசிரியர்கள் அறிவை ஒரு பொறுப்பாகப் பகிர்வதும், இது எல்லாம் கல்வியை ஒரு மதிப்பாக மட்டுமில்லை, வாழ்வியல் ஒழுக்கமாகவும் பார்த்து வளர்ந்த சமூகத்தின் அடையாளம்.

இந்த நகரின் மக்கள் எனக்கு ஒரு தனித்துவமான அனுபவம். சந்தையில் காய்கறி வாங்கும் பெண்களின் கரிசனம், சாலையில் சந்திக்கும் முதியவர்களின் புன்னகை, சைக்கிளில் சென்று கொண்டு "பாதையில் நிற்காதே மகளே" என்று மெதுவாகச் சொல்லும் ஓட்டுனர்கள். இவை அனைத்தும் அவர்களது மனித நேயத்தின் பிரதிபலிப்பு. ஆனால் அந்தப் புன்னகையின் பின்னால் தாங்கிக் கொண்டிருக்கும் துயரக் கதைகள் எனக்கு எப்போதும் ஒரு நெடிய இரகசியம் போல தோன்றும். சில கண்களில் மங்கலாகத் தெரியும் அந்த நிழல், இந்த நகரம் கடந்துபோன காலத்தின் காயங்கள் இன்னும் முற்றாக ஆறவில்லை என்பதை உணர்த்தும்.

ஒரு நாள் ரயில் நிலையத்தில் காத்திருந்தபோது, ஒரு முதியவர் மெதுவாகக் கூறிய "இந்த அமைதி கிடைக்க எத்தனை ஆண்டுகள் எடுத்துருக்கு, மகளே" என்ற அந்த ஒரு வாக்கியம் எனக்குள் ஒரு முழு வரலாற்றை எழுப்பியது.

நான் யாழ்ப்பாணத்தைப் புரிந்துகொண்டது அதன் கட்டடங்களின் வழியாகவும். பழைய நகரத்தில் உள்ள டச்சு கோட்டை, நூறு வருட வரலாற்றை தாங்கிய கத்தோலிக்க ஆலயங்கள், மரபு வீடுகளின் தூண்கள், வேலி இல்லாத முன்றில்களில் விளையாடும் சிறுவர்கள் இவை யாழ்ப்பாணத்தின் ஆன்மாவின் துகள். சுவர்களின் சிதைவிலும் கூட ஒரு உறுதியின் சொல் உள்ளது. இடிந்த கல்லிலும் ஒரு நினைவின் இசை இருக்கிறது. இந்த நகரம் என்பது ஒரு இடம் அல்ல. அது வாழ்ந்த எல்லோரின் நினைவுகளின் அருங்காட்சியகமாக உள்ளது.

யாழ்ப்பாணத்தின் மாலை நேரங்கள் எனக்கு இன்னும் அதிக நெருக்கத்தைத் தந்தன. மாலை ஆறு மணிக்கு கோவில்களில் ஒலிக்கும் மணி, காற்றைத் துளைத்துவரும் சமுத்திரத்தின் வாசனை, ஒளிவீசும் நெய்யெண்ணெய் விளக்குகள், சாலைகளில் ஓடும் சத்தம் குறையும் நேரத்தின் அமைதியான நிழல் இந்த நகரம் அந்த நேரத்தில் ஒரு கவிதையாக மாறிவிடும். கடற்கரை ஓரமாக நடந்த அந்தப் பல மாலைகளில், என் உள்ளம் சொன்னது. "இந்த நகரம் அன்றாட வாழ்வு மட்டுமல்ல, அது மனதைத் தீட்டும் இசை."

மூன்று ஆண்டுகளில் நான் கற்றது மிகவும் ஆழமான உண்மைகள். இந்த நகரம் எனக்கு அமைதியின் அர்த்தத்தைக் கற்றுத்தந்தது. அமைதி என்பது சத்தமின்மை அல்ல. அதற்கு பின்னால் இருக்கும் போராட்டத்தையும், தாங்குதன்மையையும் புரிந்துக்கொண்ட பின்பு கிடைக்கும் உணர்வு. தாங்கும் சக்தி என்பது மிகவும் சாதாரண மக்களின் அன்றாட வாழ்வை பார்க்கும்போது தெரிய வரும்.

வறுமையிலும் துன்பத்திலும் கூட சிரித்தபடி வாழும் அவர்களின் மனவலிமை என்னை ஆச்சரியப்படுத்தியது. முக்கியமாகக் கல்வி என்பது இங்கு ஒரே நம்பிக்கையாக இருக்கிறது. எந்த இழப்பு இருந்தாலும், தனது பிள்ளையைப் படிக்கச் செய்யும் தாயின் விழிகளே இந்த சமூகத்தின் எதிர்காலத்தை கட்டியெழுப்பும் நம்பிக்கையின் குரல்.

படைப்பு உலகில் நான் கண்ட யாழ்ப்பாணம் மேலும் வியப்புக்கு உரியது. கவிஞர்கள், இசைக்கலைஞர்கள், சிற்பிகள் அவர்கள் அன்றாட வாழ்க்கையைச் சாதாரணமாக வாழ்ந்தாலும், அவர்களின் படைப்புகள் சமூகத்தின் நினைவைக் காப்பாற்றும் தூண்களாக இருக்கின்றன.

பல்கலைக்கழகத்தில் நடக்கும் கலாச்சார இரவுகள், நகரின் கலை நிகழ்வுகள், நிழல் நடனங்கள் இவை அனைத்தும் எத்தனையோ சோதனைகளைத் தாண்டி இந்நகரம் இன்னும் உயிரோடு இருப்பதைச் சொல்லும்.

நான் வந்தது கல்விக்கே. ஆனால் யாழ் என்னை படிப்பதற்கு மேல் பலம் கற்றுக் கொடுத்தது. இங்கே வாழ்ந்த பெண்கள் வாழ்வின் யதார்த்தத்தை எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பதை. எந்தப் பாடப்புத்தகத்திலும் இல்லை அந்தப் பாடம். நான் நடக்கும் களப்பற்று சாலையில் எங்கோ அந்த சின்ன இடைவெளிகளில் கூட போரின் தடங்கள் இருக்கின்றன. சில சுவர்களில் இன்னும் சுட்டுப்பொட்டுகள், சில வீடுகளில் இன்னும் பசுமை வராத காயங்கள். அந்த வீடுகளில் வாழும்

தொடர்ச்சி▼

# யாழ்ப்பாணத்துக்கு கற்க வந்தேன்... கற்றுக் கொண்டேன்!

தொடர்ச்சி▼

பெண்கள் தான் போரின் உண்மையான இலக்கியம்.

அந்தக் காலத்தில் அவர்கள் தோளின் மேல் சுமந்த பாரம் எந்த அளவோ எனக்குப் புரியவில்லை. ஆனால் நான் அறிந்த சில கதைகள் என்னை இரவில் தூங்க விடாத அளவுக்கு வலிமையானவை. குண்டு வீச்சின் சத்தத்தில் குழந்தைகளைத் தூக்கி ஓடிய பெண்கள். காலை எழுந்து பள்ளிக்கு அனுப்பிய குழந்தையை மாலையில் அடக்கம் செய்த பெண்கள். ஒரே சமையலில் சமைத்த உணவை பத்து பேருடன் பகிர்ந்து உண்ட பெண்கள். வீடு விழுந்தாலும் மீண்டும் அதே மணலை நனைத்து புதிய கற்களை அடுக்கிய பெண்கள். இவை அனைத்தும் மனிதத்தன்மையின் உச்சம்.

பல்கலைக்கழக வளாகத்தில் எனக்கு நெருக்கமான சில தோழிகள் உள்ளனர். அவர்கள் சிரிப்பது அழகே. ஆனால் பலமுறை அந்த சிரிப்புக்குப் பின்னால் தங்கள் குடும்பங்கள் போரில் அனுபவித்த கதைகளை மெதுவாக பகிர்ந்து கொள்வார்கள். சிலரின் தந்தையர்கள் காணாமல் போனவர்கள். சிலரின் தாய்மார் இராணுவச் சோதனைகளில் அடிக்கடி அவமானங்களை எதிர்கொண்டவர்கள். சிலரின் அருகினங்கள் தஞ்சம் முகாம்களில் துன்பப்பட்டவர்கள். இந்த கதைகளில் பெண்களின் பெயர்கள் எங்கேயும் பெரியதாக எழுதப்படவில்லை. ஆனால் யாழின் ஒவ்வொரு கல்லிலும் அவர்கள் பெயர் பொறிக்கப்பட்டிருப்பதுபோல எனக்குத் தோன்றுகிறது.

இன்று யாழ்ப்பாணம் மெல்ல மாறுகிறது. புதிய கடைகள், சீராக்கப்பட்ட சாலைகள், வளர்ந்து வரும் வணிகம், தொழில்நுட்பத்துக்கு பழகும் இளம் தலைமுறை என இவை நகரத்தைப் புதிய பாதைக்கு அழைத்துச் செல்கின்றன. ஆனால் மாற்றத்தைக் காட்டிலும் முக்கியமானது, மக்களின் மனதில் உருவாகும் நம்பிக்கை. அது மிக மெதுவாக மலர ஆரம்பித்தாலும், அது நீடிக்கும் உணர்வு.

மூன்று ஆண்டுகளாக நான் வாழ்ந்த இந்த நகரம் எனக்கு இரண்டாவது இல்லமாக மாறிவிட்டது. நான் யாழ்ப்பாணத்துக்கு ஒரு மாணவியாக வந்தேன்.ஆனால், இன்று இந்நகரை விட்டு செல்லும் நான், அதன் நினைவுகளை என் இரத்தத்தில் பதித்து செல்கிறேன். நான் கற்றதெல்லாம் பாடப் புத்தகங்களில் இல்லை. இந்நகரின் வாழ்வியல் இசையில்தான். யாழ்ப்பாணம் எனக்கு கற்றுத்தந்தது என்னவெனில் காயங்கள் இருந்தாலும் மனிதன் மீண்டும் மலர முடியும் என்பதை. அமைதி என்பது கிடைத்த தனிச்சலுகை அல்ல. அது போராட்டத்தின் பிறந்த குழந்தை. நம்பிக்கை என்பது எத்தனை இருளாக இருந்தாலும் மறுபடியும் ஒளி காணும் மனிதன் உள்ளத்தின் ஆதாரம்.

கற்க வந்தேன். ஆனால் கற்றறிந்தது யாழின் ஆன்மாவையே.

**அப்துல் அஸீஸ் அஸ்மா,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



# பருத்தித்துறை பிரதேச சபையின் பாதீடு ஏகமனதாக நிறைவேற்றம்



**(பூ.லின்ரன்)**

பருத்தித்துறை பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு இன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபை அமர்வு தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் காலை 10:30 மணியளவில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் ஆரம்பமானது.

20 உறுப்பினர்களில் 19 உறுப்பினர்கள் கலந்துகொண்ட. சபை அமர்வில் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.



# தேசிய வாசம் வீசும் மலர்களாக கார்த்திகை மலர்கள்!

நவம்பர் மாதத்தில் குளிர்ந்த அமைதியும் வடக்கிலும் கிழக்கிலும் ஒரு வித வேதனையையும் பெருமையையும் தாங்கி கிடக்கிறது. அந்த அமைதியை நினைவுபடுத் துவதாகவும் அவர்கள் மீண்டும் உயிர்த்தெழுதலைத் தமிழர்களுக்கும் நினைவு படுத்துவதற்கே இக் கார்த்திகை மலர்கள் மலர்கின்றன.

தமிழரின் வரலாறு துயரத்தாலும் தியாகத்தாலும் நிரம்பி நிற்கும் காலத்தில் இந்த மலர் வெறும் இயற்கையின் பரிசல்ல. அதை நினைவின் தீயில் மீண்டும் மலரும் ஒரு அடையாளமாகவே காணப்படுகின்றது.

“தீபத்தின் ஒளியில் பிரகாசிக்கும் வெண்மையான உன் இதழ்களில் உயிரை தந்தவர்களின் கனவுகள் இன்னும் விழிகின்றன. இன்னும் பேசுகின்றன. மண்ணில் புதைக்கப்பட்டவர்கள் மலர்களாக இன்று மலருகின்றனர். வைக்கப்படும் ஒவ்வொரு மலரும் ஒரு தாயின் இதயத்துடிப்பு போல துடிக்கின்றன”

இவ்வாறு ஒவ்வொரு வருடமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த மாவீரர்களை போற்றும் வகையில் பூக்கள் மலர்கின்றன.

எத்தனை அடக்குமுறை வந்த போதும் ஆலயங்களில் மணி ஒலிப்பதோ, தீபம் ஏற்றுவதோ தடை செய்யப்பட்ட போதும் மாவீரர் நாளில் கார்த்திகை மலர்கள் இதழ்களை விரித்து மாவீரர்களை அஞ்சலிக்க தவறவில்லை.

தமிழரின் இதய அஞ்சலியைத் துப்பாக்கி முனையில் அதிகாரம் தடுத்து நிறுத்தினாலும் இயற்கையின் கார்த்திகை போவதில்லை யாராலும் அடக்க முடிய வில்லை. இவர் தேசத்தோடு மாத்திரமல்லி தேசத்தில் வாழுகின்ற மக்களின் நம்பிக்கைகளிலும் பூக்கள் பங்கு வகிக்கின்றன.

கார்த்திகை மாதத்தில் போகும் இந்த பூ வேலைகளில் மட்டும் அல்ல மாவீரன் வீடுகளிலும் சாலையோரங்கள் மற்றும் காடுகளிலும் படர்ந்து வளரக்கூடியது. இந்த மலரானது அழகிய விரல்களைப் போலவும் சுடர்கள் போலவும் காட்சியளிப்பதுடன் மஞ்சள் மற்றும் சிவப்பு நிறமாக காணப்படுவதால் தமிழர்களுடைய சின்னத்துடன் இணைந்ததாகவே காணப்படுகிறது. மற்றும் இந்த நிறங்கள் விடுதலையையும் போரையும் குறிப்பதாகவே விளங்குகின்றது.



இலங்கை தீவின் ஒரே ஒரு பூ நீலோற்பலம் தான் என்று அதன் நாசி வழிகள் எங்கும் நீலோற்பலத்தால் அடைத்து வைத்திருக்கிறது. இயற்கை அதன் பரிணாம பாதைக்கு குறுக்காக நிற்கும் எதனையும் தூக்கி எறிந்து தன் பல்லினத்துவத்தை நிலை நிறுத்து ம் பேராற்றல் பெற்றது என்பதை வரலாறு பூராகவும் நிரூபித்த வந்துள்ளது.

கார்த்திகை பூவும் கார்த்திகை கனவுகளும் ஈழத்தமிழர்களதும் புலம்பெயர் தமிழர்களதும் வாழ்வில் மறக்க முடியாத நாளாக கார்த்திகை 27 காணப்படுவதை இந்த மலர்கள் நினைவு கூறுகிறன.

**கு.லோகிதா,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# போரின் இருளில் மலர்ந்த பெண்கள்...!

நான் அறிந்த யாழ்ப்பாணத்தின் பெண்கள்
ஒருகாலத்தில் பல்லாங்குழியின்
ஓசையைக் கூட அறியாதவர்கள்...
அவர்களின் காலடிச் சத்தம்
காலையில் கிணற்றுத் தண்ணீரின் சலசலப்போ,
மாலையின் மெல்லிய பாடலாகவோ இருந்தது...

ஆனால் ஒரு நாள் அந்தச் சத்தம்
பீரங்கிச் சத்தத்தில் புதைந்தது!
அந்நாள்களில் பெண்கள்
அச்சமில்லாமல் வாழ்ந்தவர்கள் அல்ல!
அச்சத்தைத் தாண்டி வாழ்ந்தவர்கள்...

குழந்தைகளின் தலையைத் தழுவியவாறே
கைகளில் அடையாள அட்டைகளையும்
சரணாலயக் காகிதங்களையும் பிடித்துக் கொண்டு
பாதைகள் தெரியாத புலம்பெயர்ச்சியில் நடந்தவர்கள்!
போரின் பொடி மழையில்
அவர்கள் ஆடைகள் கரைந்தன
ஆனால் மார்பில் பதிந்த தைரியம்
ஒரு துளியும் கரையாதது...

இரவில் குழந்தைகளை நெஞ்சில் அழுத்திக் கொண்டு,
“பயப்படாதே” என்று சொல்லியவர்களின் குரல்
அவர்களின் சொந்த அச்சத்தையே
நடுங்கச் செய்திருக்கலாம்!
ஆனால் அந்த நடுக்கம் குழந்தைகளுக்கே தெரியாமல்
அவர்கள் புன்னகையில் ஒளிந்துவிட்டது!

மருத்துவ முகாம்களில்
தினமும் விழுந்து போகும்
உயிர்களைப் பார்த்தபோதும்
தங்கள் கைகளால் இன்னொரு உயிரை
நாளை நோக்கி தள்ள முயன்றவர்கள்
பெண்கள்தான்...

கைவைத்த மருந்து இல்லாமல்,
பாதுகாப்பு இல்லாமல்,
சில நேரங்களில் பெயர்கூட
சொல்ல நேரமில்லாமல்
அவர்கள் செய்த சேவை
இன்றைக்குப் போதும்
வரலாற்றின் தழுவலாகத் திகழ...

கடல் வழியாக ஓட வேண்டிய நாள்களில்
பெண்கள் குழந்தைகளை
தங்கள் முதுகில் கட்டிக் கொண்டு
அலைகளைக் கடந்து உயிர் தப்பினர்
நீரின் உப்பு தங்கள் கண்களில் கலந்தாலும்
அவர்கள் கண்ணீரின் உவர்ப்பு
அதற்கும் மேலானது...

வீடு திரும்பும் போது
வீடு இல்லாதவர்களும் இருந்தார்கள்
கட்டிலின் இடத்தில் கரிய கற்கள்,
சுவற்றின் இடத்தில் புகை,
நெருப்பின் இடத்தில் மாய்ந்த நினைவுகள்



ஆனால் அவர்கள் மீண்டும் எழுந்தார்கள்
மண்ணைக் கைகளை வைத்து பிரார்த்தித்த பின்பு
அதே மண்ணில் குடிசை எழுப்பி
புதிய குடும்பத்தின் நரம்புகளாக மாறினார்கள்

போருக்குப் பிறகும்
அவர்களின் வாழ்வு சுமைகள் குறையவில்லை
உணவுக்கான வரிசைகள்,
மருத்துவ முகாம்களின் அடர்ந்த கூட்டம்,
காணாமல் போனவர்களின் பெயர்களைத் தேடும்
நெஞ்சுக் குமுறல்கள்
இவை அனைத்தையும் தாங்கியவர்கள்
மகளிர்தான்...!

அவர்கள் கதைகள்
கதைப்புத்தகங்களில் இல்லை...
அவை தலமுறைகளுக்குத் தலமுறைகள்
கண்களில் நனைந்த நினைவுகளாகப் பயணிக்கும்.
போர் பெண்களை மாற்றவில்லை
பெண்கள் தான்
போரின் முகத்தை மாற்றினார்கள்!

அவர்கள் மனத்தின் மெல்லிய மட்டைகளில்
உடைந்த நாள்களையும் சேர்த்தே
புதிய நாள் கட்டப்பட்டதற்கு சான்று...
இன்று அவர்களின் நடைகளில்
காயங்களின் சத்தம் இருக்கும்,
அவர்களின் புன்னகையில்
மீள்கட்டப்பட்ட கனவின் வெப்பம் இருக்கும்
ஆனால் அவர்கள் கண்களில் மட்டும்
ஒரு உண்மை நிலைத்திருக்கும்
போரின் இடிபாடுகளில் கூட
பெண்கள்தான் உறுதியின் முதுகெலும்பு!

**அப்துல் அஸீஸ் அஸ்மா,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**



# அயோத்தி ராமர் கோயில் கட்டுமானப் பணி நிறைவு: 161 அடி உயர கோபுரத்தில் கொடி ஏற்றுகிறார் மோடி

அயோத்தியில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீ ராமர் கோயிலின் கொடியேற்று விழா இன்று பிரதமர் மோடி தலைமையில் கோலாகலமாக நடைபெறுகிறது.

அயோத்தியில் பிரம்மாண்ட ராமர் கோயில் கட்டும் பணி கடந்த 2020 ஓகஸ்டில் தொடங்கியது. இக்கோயில் கடந்த ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி பக்தர்களின் வழிபாட்டுக்கு திறக்கப் பட்டது. இதற்கான பிராண பிரதிஷ்டை விழா பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்றது.

இதன் பிறகு அயோத்தி, மற்றொரு பிரம்மாண்ட விழாவுக்கு தயாராகி உள்ளது. ராமர் கோயிலின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததை குறிக்கும் வகையில் இன்று பிரதான கோயில் கோபுரத்தில் கொடியேற்றும் விழா நடைபெற உள்ளது. பிரதமர் நரேந் திர மோடி இவ்விழாவில் பங்கேற்று, கோயிலின் 161 அடி உயர கோபுரத் தின் உச்சியில் காவிக் கொடி ஏற்றி வைக்கிறார். இதற்காக ராமர் பிறந்த சூரிய குலத்தை குறிக்கும் வகையில் சூரிய சின்னம், மையத்தில் ஓம் மற்றும் மந்தாரை மரம் பொறிக்கப்பட்ட காவிக் கொடி உருவாக்கப்பட்டுள்ளது.

வரலாற்று சிறப்பு மிக்க இந்த விழா வுக்கு அயோத்தியில் விரிவான ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன. வீதி அனைத் தும் தூய்மை செய்யப்பட்டு, நகரம் காவிக் கொடிகள் மற்றும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இரவில் நகரம் வண்ண விளக்குகளால் ஜொலிக்கி றது.

பிரதான பால ராமர் கோயிலுடன் மகாதேவ், விநாயகர், அனுமன், சூரிய தேவ் உள்ளிட்ட துணை கோயில்களும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. விழா சடங்குகளை பிரபல காசி பண்டிதர் கணேஷ்வர் சாஸ்திரி வழிகாட்டுதலின் கீழ் அயோத்தி, காசி மற்றும் தென் னிந்தியாவை சேர்ந்த 108 ஆச்சாரி யர்கள் மேற்கொள்கின்றனர். பிரதமரின் வருகையை முன்னிட்டு பலத்த பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன.



# டில்லியில் 50 வீதமான ஊழியர்களை வீட்டிலிருந்து பணியாற்ற உத்தரவு



டில்லியில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் 50 வீதமான ஊழியர்களை வீட்டிலிருந்து பணியாற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

காற்று தரக் குறியீடு (ஏ.கி.யூ.ஐ.) 6 வகைகளாக தரம் பிரிக்கப்பட்டிருக்கிறது. 0-50 புள்ளிகளுக்கு இடையே இருந்தால் பாதுகாப்பானது. 51-100 புள்ளிகள் இருந்தால் மிதமானது.

101 முதல் 150 புள்ளிகள் இருந்தால் நோயாளிகளின் உடல்நலத்துக்கு தீங்கானது. 151 முதல் 200 புள்ளிகள் வரை இருந்தால் ஆரோக்கியமான மக்களின் உடல் நலனுக்கும் தீங்கு விளைவிக்கும். 201 முதல் 300 வரை இருந்தால் மக்களின் உடல்நலனுக்கு அதிக தீங்கினை விளைவிக்கும். 301 முதல் 500 வரை இருந்தால் மிகவும் ஆபத்தானதாகும்.

டில்லியில் நேற்று நிலவரப்படி காற்று மாசு அளவு 450 புள்ளிகளாக இருந்தது. கடந்த சில வாரங்களாக இதே நிலை நீடிக்கிறது. இந்த சூழலில் டில்லியில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் 50 வீத ஊழியர்கள் வீடுகளில் இருந்து பணியாற்ற டில்லி அரசு நேற்று உத்தரவிட்டது.

பாடசாலைகள், கல்லூரிகளில் திறந்தவெளி மைதானத்தில் மாணவ, மாணவியர் விளையாட ஏற்கெனவே தடை விதிக்கப்பட்டுள்ளது.



# போராட்டத்தின்போது பொலிஸார் மீது ‘பெப்பர் ஸ்பிரே’ தெளித்த 17 பேர் கைது

டில்லியில் போராட்டத்தின்போது பொலிஸார் மீது ‘பெப்பர் ஸ்பிரே’ தெளித்த 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டில்லில் காற்று மாசுபாட்டின் அளவை அரசு கட்டுப்படுத்த தவறியதாக கூறி நகரின் பல இடங்களில் மக்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் இந்தியா கேட் பகுதியில் டில்லி ஒருங்கிணைப்பு கொமிட்டி சார்பில் வீதியில் அமர்ந்து போராட்டம் நடத்தினர். இதனால் நோயாளர் காவு வண்டிகள், மருத்துவ குழுக்கள் செல்வது தடைப்பட்டுள்ளதால் அவற்றுக்கு வழிவிடுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

எனினும் போராட்டக்காரர்கள் நகர மறுத்ததால் அவர்களை பொலிஸார் பலவந்தமாக அப்புறப்படுத்த முயன்றனர். அப்போது சிலர் பொலிஸார் மீது “பெப்பர் ஸ்பிரே“ பயன்படுத்தியதாக கூறப்படுகிறது.

இதில் 4 பொலிஸாருக்கு கண்களில் எரிச்சல் ஏற்பட்டதால் அவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

# ட்ரம்ப் - ஜி ஜின்பிங் தொலைபேசியில் உரை; இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த இணக்கம்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் அமெரிக்க ஜனாதிபதியை சீனாவுக்கு அழைத்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அழைப்பை ஏற்று அமெரிக்க ஜனாதிபதி 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சீனாவுக்கு செல்லவுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, அமெரிக்க ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று சீன ஜனாதிபதி அடுத்த வருடம் இறுதியில் அமெரிக்காவுக்கு செல்லவுள்ளார் என கூறப்படுகிறது.

இருவரும் உக்ரைன், அமெரிக்க சோயாபீன்ஸ் கொள்முதல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இதன்போது விவாதித்ததாக கூறப்படுகிறது.

வரி விதிப்பு காரணமாக அமெரிக்கா– சீனா இடையே பிரச்சினை ஏற்பட்ட நிலையில், தென்கொரியாவில் இரு நாட்டு தலைவர்களும் சந்தித்து பேசினர். இதன்போது, இந்த பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

தைவான் குறித்து ஜப்பான் கருத்துத் தெரிவித்ததால் சீனா– ஜப்பான் இடையே மோதல் தீவிரமடைந்து வரும் நிலையில் இந்த பேச்சுவார்த்தையில் தைவான் குறித்து டொனால்ட் ட்ரம்ப் எதுவும் கூறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து, சீனாவுடனான எங்கள் உறவு மிகவும் வலுவானது என சமூக வலைத்தளத்தில் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# உக்ரைன் - ரஷ்யப் போரை நிறுத்தும் அமைதி ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தில்

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு



உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதி ஒப்பந்தம் இறுதி கட்டத்தில் இருப்பதாக அமெரிக்க ஜனாதி–பதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வர 28 அம்சங்களைக் கொண்ட அமைதி திட்டத்தை ஜனாதிபதி ட்ரம்ப் பரிந்துரை செய்தார்.

இந்தநிலையில், ட்ரம்ப்பின் இந்தப் பரிந்துரைகள் ரஷ்யாவுக்கு சாதகமாகவும் மற்றும் உக்ரைனுக்கு பாதகமாகவும் இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக அமெரிக்கா மேற்கொண்டு நடவடிக்கைகள் மீதான நன்றியை உக்ரைன் மறந்துவிட்டதாக ட்ரம்ப் கடுமையாக சாடியிருந்தார்.

ஜெனீவாவில் உக்ரைன் அதிகாரிகளுடன் அமெரிக்க அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.


இந்தநிலையில் அமைதி ஒப்பந்தம் குறித்து ட்ரம்ப் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ரஷ்யாவிற்கும் மற்றும் உக்ரைனுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தையில் பெரிய முன்னேற்றம் ஏற்படுவது உண்மையில் சாத்தியமா?

நீங்கள் அதைப் பார்க்கும் வரை நம்பாதீர்கள் ஆனால் ஏதாவது நல்லது நடக்கலாம், அமெரிக்காவை கடவுள் ஆசீர்வதிப்பார்” என அவர் தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்தில் அதிகரிக்கும் புரோஸ்டேட் புற்றுநோய்



இங்கிலாந்தில் புரோஸ்டேட் புற்றுநோய்க்கான தேசிய பரிசோதனை திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் அதிகரித்து வருவதாக இங்கிலாந்து சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

ஆண்டுக்கு சுமார் 55,000 புதிய நோயாளிகள் பதிவாகின்றனர் எனவும் 08 ஆண்களில் ஒருவருக்கு இந்த நோய் இருப்பதாகவும் இது ஆண்களுக்கு மிகவும் பொதுவான புற்றுநோயாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.


இதேவேளை, நோயின் தீவிர நிலை பகுதிகளில் உள்ளவர்கள் மரண மடையும் அபாயம் அதிகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 25/11/2025

## கனடாவில் அதிகரிக்கும் குளிரான காலநிலை!



C2▶



# புலிகளுக்கு ஆதரவான செயற்பாடுகள் தொடர்பில் கனடாவிடம் கவலையை வெளியிட்ட அநுர அரசு

கனடாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான சின்னங்களை பொதுவெளியில் பயன்படுத்துவது மற்றும் பிரிவினைவாதச் சித்தாந்தங்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் குறித்து கனேடிய அரசாங்கத்திடம் இலங்கை தனது கடுமையான கவலையை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் இசபெல் கேத்தரின் மார்டினுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரிவினைவாதக் கதைகளை மீண்டும் உயிர்ப்பிக்க அல்லது இலங்கையின் இன சமூகங்களிடையே பிளவுகளை உருவாக்க முயற்சிக்கும் நிகழ்வுகள் மற்றும் பிரச்சாரங்களைத் தடுக்க வேண்டியதன் அவசியத்தை ஒட்டாவாவிடம் தெரிவிக்குமாறு உயர் ஸ்தானிகரை ஹெரத் வலியுறுத்தியுள்ளார்.

C2▶





# கனடாவில் அதிகரிக்கும் குளிரான காலநிலை!

கனடாவில் குளிரான காலநிலை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

அண்மையில் கனடா மற்றும் அமெரிக்காவில் தாக்கிய கடுமையான குளிர் காலநிலைக்கு துருவ சுழல் இயக்க வியலே கரணம் என கூறப்படுகிறது.

இந்த வானிலை நிகழ்வு முதன் முதலில் 2014 ஆம் ஆண்டில் பிரபல மடைந்தது, அப்போதிருந்து வெப்ப நிலை குறைந்துள்ளது.

மேற்கு மற்றும் மத்திய கனடாவில் வரவிருக்கும் வாரங்களில் மீண்டும் கடுமையான குளிர் நிலவும் என்று முன்னறிவிப்பாளர்கள் கூறுகின்றனர்.

மேலும் கிழக்குப் பகுதிகளுக்கும் இது நகரக்கூடும்.

துருவ சுழல் என்பது எப்போதும் வளிமண்டலத்தின் மேல் அடுக்கில் (ஸ்ட்ராடோஸ்பியரில்) இருக்கும், அது நிலையாக இருக்கும்போது வடக்கிலேயே இருக்கும்.

இருப்பினும், சில சமயங்களில் அது நிலையற்றதாகி தெற்கு நோக்கி நகர்ந்து, ஜெட் ஸ்ட்ரீமுடன் இணைந்து அசாதாரணமான குளிரைக் கொண்டு வருகிறது என்று மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் கால நிலை ஆய்வாளர் ஜூடா கோஹன் விளக்குகிறார்.

ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஒருமுறை துருவ சுழலில் இடையூறு ஏற்படுகிறது, இதனால் சில நாள்களிலேயே கணிசமான வெப்பநிலை உயர்வு அல்லது காற்று அமைப்பில் மாற்றம் ஏற்படுகிறது என தெரிவிக்கப்படுகிறது.

# புதிய குடியுரிமைச் சட்டமூலம் ஜனவரியில் நிறைவேற்றப்படும்

கனடாவின், புதிய குடியுரிமை சட்ட மூலமான சி-3 எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் நிறைவேற்றப் படுமென கூறப்படுகிறது.

கனடா தனது குடியுரிமை சட்டங்களை நவீனப்படுத்தும் புதிய முயற்சியில் இறங்கியுள்ளது.

அதன்படி, கனடாவின் குடியுரிமை சட்ட, திருத்த சட்ட மூலத்துக்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதற்கமைய, சி-3 எனும் புதிய திருத்தச் சட்ட மூலத்தைக் கனடா முன்வைத்துள்ளது.





கடந்த 2009 ஆம் ஆண்டு கனடா குடியுரிமை வாரிசுரிமை சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த சட்டமூலம் கனடாவில் பிறந்து வெளிநாட்டில் வசிக்கும் ஒரு கனேடிய குடிமகனுக்கு, வெளிநாட்டில் பிறக்கும் குழந்தையின், கனடா குடியுரிமையைத் தடுத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

இதனையடுத்து, கடந்த 2024 மே மாதம் சி-3 எனும் புதிய திருத்த சட்ட மூலத்தைக் கனடா அரசு அறிமுகப் படுத்தியது.

**புலிகளுக்கு ஆதரவான...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவில் உள்ள உள்ளூர் குழுக்களின் இத்தகைய நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்தின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு எதிரானவை.

இதனை கட்டுப்படுத்தப்படா விட்டால் இருதரப்பு புரிதலை சீர்குலைக்கும் என்றும் இலங்கை வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் கனடாவில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகவே உள்ளது என்றும், விடுதலைப் புலிகள் அல்லது பிற பிரிவினைவாத சித்தாந்தங்களுடன் தொடர்புடைய எந்த சின்னங்கள் அல்லது சின்னங்களையும் கனேடிய கூட்டாட்சி அரசாங்கம் அங்கீகரிக்க வில்லை என்றும் உயர் ஸ்தானிகர் மார்ட்டின் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், கனடா எப்போதும் இலங்கையின் இறைமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு ஆதரவாக உள்ளது என்றும் அவர் தெளிவுபடுத்தினார் என தெரிவிக்கப் படுகின்றது.

# துப்பாக்கி திரும்பப் பெறும் திட்டம் தேசிய அளவில் தொடங்கப்படும்

## கனேடிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



கூட்டாட்சி அரசாங்கத்தின் துப்பாக்கி திரும்பப் பெறும் திட்டம் கனடா முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்று கனேடியப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

“கனடா நாடு முழுவதும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும்போது, எங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகளை நான் காண்பிப்பேன்.

கனடா முழுவதும் இந்தத் திட்டத்தை நாங்கள் செயல்படுத்துவோம்.” என்றும் கரி ஆனந்தசங்கரி கடந்த ஞாயிற்றுக் கிழமை கூறினார்.

‘வட கரோலினாவின் கேப் பிரெட்டனில் இந்த திட்டத்தின் முதல் கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிகளை திரும்பப் பெறும் திட்டத்தின் அதிகாரப்பூர்வ முடிவுகள் இன்னும் கிடைக்கவில்லை.

ஆனால் கேப் பிரெட்டன் பிராந்திய நகராட்சியின் பொலிஸ் ஆணையத்தின் தலைவர், இந்த வார தொடக்கத்தில், பொலிஸ் 22 சட்டவிரோத துப்பாக்கிகளை திரும்ப வாங்கியதாகக் கூறினார்.

இந்த எண்ணிக்கை சரியாக இருந்தால், ஒட்டாவாவின் இலக்கில் ஒரு பகுதியை மட்டுமே பாதுகாப்பு நிறுவனம் சேகரித்தது என்று அர்த்தம்.

இந்த திட்டம் ஒக்டோபர் 1 ஆம் திகதி தொடங்கி ஆறு வாரங்கள் நீடித்தது, இதன் முடிவுகள் தேசிய அளவில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு திரும்ப வாங்கும் திட்டத்தைச் செம்மைப்படுத்தப் பயன்படுத்தப்பட்டன.

எனினும், இந்த முன்னோடித் திட்டத்திற்கு சில எதிர்ப்புகள் எழுந்தன.

திட்டம் தொடங்கப்பட்ட சிறிது நேரத்திலேயே, 100 இற்கும் மேற்பட்டோர் கேப் பிரெட்டன் பிராந்திய பொலிஸ் தலைமையகத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

துப்பாக்கித் தடை மற்றும் திரும்பப் பெறும் திட்டத்தை இரத்து செய்ய ஒட்டாவாவை கோரியமையும் குறிப்பிடத் தக்கது.

# கனடிய தொழில் அமைச்சர் ஆசியாவிற்கு விஜயம்



கனடாவின் தொழில் அமைச்சர் மெலனி ஜோலி, ஐந்து நாள் ஆசியப் விஜயத்தை தொடங்கியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு தொடர்பான துறைகளில் வெளிநாட்டு முதலீடுகளை பெருமளவில் ஈர்ப்பதற்கான முயற்சியின் பகுதியாக இந்த விஜயம் அமைந்துள்ளது.

இந்தப் பயணத்தின் போது, கனடாவின் அமெரிக்கா அல்லாத ஏற்றுமதிகளை விரைவாக அதிகரிக்கும் திட்டத்திற்கான முக்கிய நிறுவனங்களுடன் சந்திப்புகள் நடைபெறவுள்ளன.

இதில், கனடாவின் புதிய நீர்மூழ்கிக் கப்பல் கொள்முதல் திட்டத்திற்கு போட்டியிடும் இரண்டு நிறுவனங்களில் ஒன்றுடனும் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜோலி, தென் கொரியாவின் முன்னணி தொழில்துறை குழுமமான ஹன்வா நிறுவனத்தின் உயர் அதிகாரிகளை சந்திக்க உள்ளார்.

தென் கொரியாவின் சியோல் மற்றும் புசான் நகரங்கள், பின்னர் ஜப்பானின் டோக்கியோ நகரம் ஆகியவற்றுக்கு ஜோலி விஜயம் செய்ய உள்ளார்.

ஓட்டோமொபைல் மற்றும் பேட்டரி உற்பத்தி, கப்பல் கட்டும் தொழில், சுரங்கத் தொழில் மற்றும் பாதுகாப்புத் துறை முதலீடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்த விஜயத்தில் கவனம் செலுத்தப்பட உள்ளது.

கனடாவின் பாதுகாப்பு கொள்முதல் துறையில் பெரும் மாற்றங்கள் எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்த சந்திப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

கனடா, தற்போதைய விக்டோரியா வகை நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு மாற்றாக அடுத்த பத்து ஆண்டுகளில் பணியிலிருந்து விலகவுள்ளதால், மேலும் 12 புதிய நீர்மூழ்கிக் கப்பல்களை கொள்வனவு செய்ய முயற்சி செய்து வருகிறது.

இது பல பில்லியன் டொலர் மதிப்புள்ள கனடாவின் மிகப்பெரிய இராணுவ கொள்முதல் திட்டங்களில் ஒன்றாகும்.

அண்மையில், பிரதமர் மார்க் கார்னி தென் கொரியாவிலுள்ள ஹன்வா நீர்மூழ்கிக் கப்பல் உற்பத்தி வசதியைப் பார்வையிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.